**அபிவிருத்தி லொத்தர் சபை 2022**

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, சபையின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்தும் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நிய-ாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நி-கழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஒழுங்குபடுத்தும் சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 69 ஆம் பந்திக்கு முரணாக கடந்த வருடங்களில் நடைமுறைப் பொறுப்புகளாக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 13,793,093 தொகை மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானமாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் | கடந்த வருடங்களில் அட்டுறுச் செலவினத்தின் மதிப்பீடுகளில் இடம்பெற்ற வேறுபாடுகளின் திருத்தமாகும். | ஐந்தொகை திகதியில் உள்ளபடியாக செலுத்துவதற்கு உள்ள பட்டியல்களின் அடிப்படையில் அட்டுறு செலவினத்தை கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 36 ஆம் பந்திக்கமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை மீள்மதிப்பீடு செய்யும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுக்குரிய வகுப்பு முழுவதும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அலுவலக உபகரணங்கள, தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் ஆகிய இரு சொத்து வகுப்புகளுக்குரிய ரூபா 56,204,125 கூட்டுப் பெறுமதியுடைய சொத்துக்களில் ரூபா 11,707,714 தொகையான சொத்துக்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 44,496,411 கூட்டுப் பெறுமதியுடைய சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளையும் கருத்திற்கொண்டு சபையின் அனைத்து சொத்துக்களுக்காகவும் முறையான மீள்மதிப்பீடொன்று 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படவுள்ளது. | உரிய நிமயங்களின் பிரகரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை மீள்மதிப்பீடு செய்யும் போது அதற்குரிய மொத்த வகப்பும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தற்போது நிர்மாணிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள பணிகளுக்காக திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 1,728,884 கூட்டுத்தொகையான செலவினங்களுக்கு உர-ிய கணக்கீட்டு | கணக்கீட்டு நியமம் LKAS 16 இன் பிரகாரம் சொத்தொன்றாக இனங்காணுவதற்காக குறித்த சொத்தானது நலன்களை பெறும் மட்டத்தினை அடைந்திருக்க வேண்டும். . (It is Probable that Future | இந்த நிர்மாணத்தை மேற்கொள்ள உத்தேசமில்லை எனின், இந்த மீதியை நடைமுறை வேலை கணக்கினுள் வைத்திருத்தல் அவசியமற்றது என்பதால், அதற்கான கணக்கீட்டு சீராக்கம் மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கங்களை மேற்கொள்ளாது 08 வருடங்களாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நடைமுறை வேலையாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | economic benefits associated with the item will flow to the entity.) அதனால், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேற்படி நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வேண்டியமை. |
| (ஆ) | சபையின் 2022 ஆம் ஆண்டின் வருமான வரி செலவினத்தை கணிப்பீடு செய்யும் போது முதல் அரையாண்டின் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின் அடிப்படையில் 24 சதவீதம் மற்றும் இரண்டாவது அரையாண்டில் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின் அடிப்படையில் 30 சதவீதம் உரித்தாக்கிக் கொள்ளப்படவேண்டிய போதிலும் சபையினால் முழு வருடத்தினதும் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின் அடிப்படையில் 30 சதவீத வரி விதம் உரித்தாக்கபட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் வருமான வரி செலவினம் ரூபா 6,127,600 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் வரிக்குப் பின்னரான இலாபம் அந்த அளவினால் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது. | வருடாந்த வருமான வரியை கணிப்பீடு செய்யும் போது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக கணிப்பிட முடியாமையால் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் (LKAS) 12 இன் பிரகாரம் அதற்காக மதிப்பீடொன்றின் அடிப்படையில் மாத்திரம் ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்படும். வருடாந்த வருமான வரியியை திட்டவட்டமாக கணிப்பிட்டு கொடுப்பனவு மேற்கொள்வதற்காக அதற்கடுத்த நிதியாண்டின் செப்தம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது.<br><br>அதற்கமைய எம்மால் 2023 செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னதாக உரிய முறையில் முதல் 09 மாதங்கள் மற்றும் இறுதி 03 மாதங்களுக்காக வருமானம் மற்றும் செலவினங்களை கருத்திற்கொண்டு தனித்தனியாக கணிப்பிடப்பட்டதன் பின்னர் உரிய வரி வீதங்களுக்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | இது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விடயங்களை வினவி அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | நடைமுறையல்லாத சொத்துக்களினுள் | இந்த கார் சபையின் பெயரில் பதிவு | இந்த வாகனத்தை சபைக்கு பௌதீக |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்ட ரூபா 8,095,000 பெறுமதியான கப் வண்டி ஒன்று முன்னால் தலைவரினால் எடுத்து செல்லப்பட்டமையால் பௌதிகரீதியாக சபையிடம் காணப்படவில்லை. | செய்யப்பட்டுள்ளது. இந்த பதிவின் அடிப்படையில், தொடர்புடைய சொத்து 2012 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்டுள்ளது. | ரீதியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | 2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் லொத்தர் விற்பனை வருமானமாக கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 840,343 கூட்டுத்தொகையான லொத்தர் சீட்டுக்களின் விற்பனை செய்யப்படாது மீள் செலுத்தல்களாக கருதி மீளாய்வாண்டிலும் குறித்த பகிர்ந்தளிப்பு பிர-திநிதிகளுக்கு பணம் செலுத்தப்பட்டு மீள் அனுப்பல்களாக ரூபா 616,743 மற்றும் வாகன பராமரிப்பு செலவினமாக ரூபா 223,600 எனுமாறு கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 840,343 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்த டிக்கெட் இருப்புகளுக்கு உரிய கொடுப்பனவு 2022 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது.<br><br>அந்த தொகையினுள் ரூபா 223,600 தொகையான வாகனப் பராமரிப்புச் செலவாகத் தவறாகக் கணக்கிடப்பட்டதுடன், எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்குமாறு ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| **(அ)** | **செலுத்த வேண்டிய மீதிகள்** | | | | சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தால் | குறித்த நிறுவனங்களுடன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | - இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் | 13,758,998 | 17,593,053 | 3,834,055 | வழங்கப்பட்ட விவரங்களைப் பெற்ற பிறகு, சரியான ஒப்பீடு செய்து, இந்த மாற்றத்திற்கான காரணங்களைக் குறிப்பிடுவோம். | கலந்துரையாடி அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| | - இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | 39,230,000 | 45,150,000 | 5,920,000 | | |
| | - வரையறுக்கப்பட்ட அசோசியேட்டட் நிவுஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் கம்பெனி | 12,005,909 | 1,946,541 | 10,059,368 | | |
| (ஆ) | இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய | இல்லை | 1,921,681 | 1,921,681 | - மேற்படி - | - மேற்படி - |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு உரிய கணினி மயப்படுத்தப்பட்ட மூலப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட கணினி மற்றும் அலுவலக உபகரண உருப்படிகளின் விபரங்கள் | 6,631,587 | கணினி மற்றும் அலுவலக உபகரண உருப்படிகளின் அளவு, கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டு பெறுமதி, கொள்வனவு செய்த திகதி | நிலையான சொத்துக்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய சபையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள, கணினிகள் மற்றும் உதிர்ப்பாகங்களின் இருப்பு ரூபா 4,107,599 தொகையை அகற்ற பரிந்துரைத்ததுடன், அந்த பரிந்துரைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் ஊடாக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு கணக்குகளில் இருந்து நீக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா           2,523,988 பெறுமதியான அலுவலக உபகரணங்களைப் பொறுத்தமட்டில் குழுவால் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி லொத்தர் சபை கடன் அடிப்படையில் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் போது மீள அறவீடு செய்யும் அடிப்படையில் 2003 நவம்பர் 13 ஆந் திகதி மற்றும் 2008 ஏப்ரல் 26 ஆந் திகதி இரு நிறுவனங்களிடமிருந்து முறையே ரூபா 75,000 மற்றும் ரூபா 100,000 படியாக ரூபா 175,000 ஆன தொகை வைப்பு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த இரு நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த வைப்புத் தொகைகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பாதுகாப்பு வைப்பு கட்டணங்கள் தொடர்புடைய காலத்தின் முடிவில் பெறப்பட்ட எரிபொருளுக்கு எதிராக ஈடுசெய்யப்படுவது அவதானிக்கப்பட்டது. ஆனால் அந்த வைப்புப் பண கணக்குகளில் இருந்து பணம் எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது மீண்டும் ஆய்வு செய்யப்பட்டு தொடர்புடைய தகவலுடன் பொருத்தப்பட்டு, சரியான பதிவு வைத்தல் அல்லது பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த பெறத்தக்க மீதிகளை சரிபார்த்து, தொடர்புடைய கணக்கீட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஆ) | சபையினால் வொக்ஷேல் வீதியின் இலக்கம் 234 கொண்ட கட்டிடம் 2006 ஒக்தோபர் மாதம் முதல் | இது தொடர்பான அனைத்து தகவல்களும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு | இந்த தொகையை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை ஒருதலைப்பட்சமாக மீறப்பட்ட காரணத்தால் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்ட ரூபா 723,780 மற்றும் அந்த வருடத்திற்காக செலுத்திய வாடகைத் தொகையின் ஒரு பகுதியான ரூபா 4,976,220 ஆகிய தொகைகளின் கூட்டுத்தொகையான ரூபா 5,700,000 இற்றைக்கு 16 வருடங்களுக்கு முன்பிருந்து அறவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொள்ளும் அடுத்த சட்ட நடவடிக்கைகளுக்கு தேவையான ஆதரவை சபை வழங்கும். | |
| (இ) | 1990 ஆம் ஆண்டின் போது வோட் பிரதேசத்தின் நபர் ஒருவருடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,520,000 ஆன கட்டிட வாடகை வைப்புத் தொகையை அறவிட்டுத் தருமாறு 23 வருடங்களுக்கு முன்னர் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு 2016 சனவரி 11 ஆந் திகதி கிடைத்திருந்தது. குறித்த தொகையை அறவிடுமாறு வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டு சுமார் 06 வருட காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பிரதிவாதி இந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளார். அந்த மேன்முறையீடு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் போதே குற்றவாளி உயிரிழந்துள்ளார். இதன் காரணமாக பிரதிவாதிகளுக்கு பதிலாக அவரது மனைவி மற்றும் மகன் ஆகியோர் பதிலீட்டாளர்களாக இந்த வழக்கில் தொடர்புபடுத்துவதற்கு உரிய சித்தாரிசு கடிதம் கொழும்பு மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய நீதிமன்றங்களால் பிரதிவாதிகளுக்கு கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | இந்த தொகையை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2013 ஆம் ஆண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் ரூபா 2,877,144 மற்றும் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 749,583 எனுமாறு ரூபா 3,626,727 கூட்டுத்தொகை தனியார் | அபிவிருத்தி லொத்தர் சபைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்மாணப் பணிகள் தொடர்பான திட்டங்களைத் தயாரிப்பதற்காக தனியார் | சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து பணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிறுவனமொன்றுக்கு கட்டிட திட்ட மதியுரைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தினுள் எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்றாது, சபையின் நிதியினை வெளிவாரித் தரப்பினரிடம் வைத்திருப்பதற்க சபையினால் இடமளிக்கப்பட்டிருந்தது. | ஆலோசனை நிறுவனமொன்றுக்கு முன்பணமாக ரூபா 3,626,727 செலுத்தப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவு குறித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் விரிவாகப் பேசப்பட்டு, செலுத்திய பணம் திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாததால், தள்ளுபடி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதற்கமைய நிதிப்பிரமாணம் 104 இன் படி, இந்த தொகையை பதிவழித்தல் அல்லது திரும்பப் பெறுவதற்கான பரிந்துரைகளைப் பெற, ஒரு அறிக்கையைத் தயாரித்து, அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பரிந்துரைகளை பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>2022 மார்ச் 10 அன்று நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவில் இது தொடர்பான அறிக்கையைத் தயாரித்து அனுப்புமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, , 2022 ஜூன் 15 அன்று பொது முயற்சிகள் குழுவின் செயலாளருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |

### 1.6.2 முற்பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்க தங்குமிட வசதிகளை பெற்றுக்கொள்ள 2014 ஆம் ஆண்டின் போது நிறுவனமொன்று மற்றும் மூன்று தனிநபர்களக்கு ரூபா 202,800 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 08 வருட காலமாக சபையின் நிதி வெளிவாரித் தரப்பினரிடம் வைத்திருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடத் தவறியிருந்தது. | இதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் சந்தித்து தவணை முறையிலேனும் இந்த பணத்தை வசூலிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். | முன்பணத்தை தீர்ப்பனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சபையினால் ரூபா.1,728,541,094 கூட்டுத் தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சபையின் நிதிய முகாமைத்துவத்தின் ஊடாக குறிப்பிடத்தக்க வட்டி வருமானத்தை ஈட்டுகிறது மற்றும் வருமானம் ஜனாதிபதி நிதிக்கு அனுப்பி வைக்கின்றது. 2022 நிதியாண்டில் ரூபா 273 மில்லியன் ரூபா வட்டி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கான | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச் சட்டத்தின் 17(5) ஆம் பிரிவு | பரிசில்களை வென்றோர் உரித்துக் கோராத 06 மாத காலத்தை கடந்த பரிசில்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தமையால் கிடைக்கும் தொகையை முதலாவதாக நிதியத்திற்கும் அதன் பின்னர் சனாதிபதி நிதியத்திற்கும் செலவு வைக்க வேண்டிய போதிலும் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பரிசில்களாக வழங்குவதற்கு கொள்வனவு செய்த ரூபா.779,750 கூட்டு பெறுமதியுடைய மூன்று மோட்டார் துவிச்சக்கர வண்டிகள் விற்பனை செய்யப்பட்டு அந்த தொகை அதிகாரச் சட்டத்திற்கமைய ஈடுபடுத்த மீளாய்வாண்டின் மே 30 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணிகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஜனாதிபதி அலுவலகத்திற்கு கொள்வனவு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மேலும் இந்த 03 மோட்டார் சைக்கிள்கள் ஜனாதிபதி அலுவலகத்தால் ஜூன் மாதத்தில் கொள்வனவு செய்யப்படும். | 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (இ) | 2019 டிசம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கை | 2020 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னதாக அரசு கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்களாக அரச நிறுவனங்கள் www.promise.lk வலைதளத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அரச பெறுகைகள் | தற்போது இந்த நிறுவனம் இலத்திரனியல் அரச பெறுகைகள் நடைமுறையின் (e - GP) இன் கீழ் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளது. இந்த பதிவினை | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடைமுறையின் (e - GP) இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபையின் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிராமையால் அதற்கமைய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | மேற்கொண்ட பின்னர் இந்த நிறுவனத்திற்கு அந்த பெறுகை நடைமுறையை பின்பற்றும் இயலுமை காணப்படுகின்றது. | |
| (ஈ) | 2008 டிசம்பர் 31 ஆம் திகதிய 42 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | 147 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 250,000 ஆன கடன் எல்லையை விஞ்சி ரூபா 9,867,854 கூட்டுத்தொகை இடர் கடனாக வழங்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட் பின்னர் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவ ாறு ரூபா 250,000 இனை விஞ்சாத வகையில் இடர் கடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது. அதற்கமைய 2022 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் எந்தவொரு பதவியணி அங்கத்தவருக்கும் குறித்த எல்லையினை விஞ்சி இடர் கடன் தொகை வழங்கப்படுவதில்லை ல. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமை ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(உ) இலங்கை சனாநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை – 2006

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 4.3 ஆம் பிரிவு | (i) அனைத்து தொடர்புடைய செலவினங்களும் உள்ளடங்களாக கிரய மதிப்பீடு பெறுகைகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு, அதற்காக | எதிர்கால பெறுகை தேவைப்பாடுகளுக்க ாக கணக்காய்வின் சுட்டிக்காண்பித்தல்க ள் கருத்திற்கொள்ளப்ப டும். | உரிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமை ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்களத்தின் தலைவரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 9.125 மில்லியனான நாடாளாவிய ரீதியில் 200 விற்பனைக் கூடங்களை மீள நிறுவுதல் மற்றும் 25 லொத்தர் விற்பனை கூடங்களை புதிதாக உருவாக்கும் பணிக்கான மொத்த கிரய மதிப்பீடொன்ற தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | | 07 லொத்தர் சீட்டுக்களை அச்சீடு செய்யும் கிரய மதிப்பீடுகள் ஒவ்வொரு லொத்தர் சீட்டுக்கும் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு விலைக்கேள்வி கோரல் திணைக்கள பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுகை நமைுறை அமைச்சின் பெறுகைகள் குழு அல்லது அமைச்சரவை பெறுகைகள் குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டு பெறுகை நடவடிக்கை இரத்துச்செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் என்பதால் அது தொடர்பில் மேலதிக தெளிவுபடுத்தல் வழங்க முடியாது. | உரிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 4.2.3 ஆம் பிரிவு | பெறுகை நடவடிக்கைகளின் ஒவ்வொ | இதற்குரிய விலைக்கேள்வி | உரிய பெறுகைகள் வழிகாட்டிக் |

| | | |
|---|---|---|
| கட்டங்களுக்காகவும் எடுக்கும் காலத்தினை சரியாக தீர்மானித்து அந்த காலப்பகுதியினுள் அந்த பணியை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், இரண்டாவது தடவையாக 2022 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 08 லொத்தர் சீட்டு வகைகளை அச்சிடுவதற்க உரிய பெறுகை நடவடிக்கை 2023 மார்ச் மாத இறுதியளவில் 01 வருடம் 01 மாதம் கடந்திருந்த போதிலும், விலைக்கேள்வி கையளிப்பதற்கு தவறியிருந்தது. | கையளிப்பு 2023 ஏப்ரல் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டு ள்ளதுடன், புதிய வழங்கல்களை ஆரம்பித்தல் 2023 மே 16 ஆந் திகதி முதல் இடம்பெறும் வகையில் விலைக்கேள்வி கையளிப்பு இடம்பெற்றவாறு காணப்பட்டது. அதற்கமைய திருத்தப்பட்ட பெறுகை கால அட்டவணைக்கமைய விலைக்கேள்வி கையளிப்பு இடம்பெற்றுள்ளது. | கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,266,591,501 ஆன இலாபமாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,953,528,558 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 313,062,943 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு லொத்தர் சீட்டு விற்பனை வருமானம் மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் ஆகியன பிரதான காரணமாக இருந்தன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான மீளாய்வு

(அ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது லொத்தர் சீட்டு விற்பனை வருமானம் ரூபா 3,707,058,253 இனால் அல்லது 24 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே, முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 81,603,744 இலிருந்து ரூபா 233,746,005 வரையிலும் 185 சதவீதத்தினால் அதிகரித்த காரணத்தால் ஏனைய வருமானம் ரூபா 110,304,701 இலிருந்து ரூபா 320,846,644 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த வருடத்திற்க ஒப்பாக லொத்தர் சீட்டு கிரயம் ரூபா 433,523,004 இலிருந்து ரூபா 844,240,759 வரையிலும் 95 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னாள் தலைவரினால் 2008 ஏப்ரல் 22 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த கப் வண்டி ஒன்றிற்காக அந்த நிறுவனத்திற்கு கப் வண்டியின் பெறுமதி மற்றும் அந்த தொகைக்கு உரிய சட்டரீதியான வட்டியாக ரூபா 14,923,369 மற்றும் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா.245,000 எனுமாறு ரூபா 15,168,369 கூட்டுத்தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் சபையினால் தொடுக்கப்பட்ட வழக்கு 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவடைந்திராததுடன் இது தொடர்பில் சபைக்காக ஆஜராகிய சட்டத்தரணிக்கு ரூபா 1,674,185 ஆன தொகையும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த நிகழ்வு தொடர்பில் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த செலவினம் ரூபா 16,842,554 ஆகும். | சபைக்கு கொள்வனவு செய்யப்பட்ட WP-PB 6024 ஆம் இலக்கமுடைய கெப் வண்டியொன்று முன்னாள் தலைவர் ஒருவர் எடுத்துச் சென்றிருந்த காரணத்தால், வாகனத்தை கொள்வனவு செய்த நிறுவனத்திற்னு சபை பணம் செலுத்தாத காரணத்தால் அந்த தனியார் நிறுவனங்களால் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்த காரணத்தால் சபையினால் அந்த நிறுவனத்திற்க ரூபா 15,168,367 ஆன தொகை செலுத்த நேர்ந்தது. அதன் காரணமாக கெப் வண்டியின் பெறுமதி, சட்ட வட்டி, குறித்த நிறுவனங்கள் மேற்கொண்ட சட்டத்தரணி கட்டணம் மற்றும் சபையீன் சட்டத்தரணிக்கான கட்டணமாக ரூபா 1,674,185 ஆன நட்டமொன்று சபைக்கு நேர்ந்திருந்தது. இந்த பணத்தை அறவிடுவதற்காக உரிய சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த வழக்கிற்கரிய முதலாவது நீதிமன்ற திகதி 2022 மே 06 ஆந் திகதி இடம்பெற்றதுடன், இரண்டாவது நீதிமன்ற திகதியாக 2023 ஏப்ரல் 07 ஆந் திகதி இடம்பெற்றது. | சட்ட நடவடிக்கைகளின் ஊடாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பண்டக்குறி மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டு பரிசில்களுக்காக வழங்கப்பப்படாத மொத்த நிறை 692 கிராம்களுடைய தங்கக் காசுகள் மற்றும் தங்க நகைகளை விற்பனை செய்வதற்ற 2022 சனவரி 25 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் மூலம் இந்த தங்க ஆபரணங்கள் மீளாய்வாண்டின் போது மூன்று தடவைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுட்ன, மதிப்பீட்டு பெறுமதி ரூபா 15,137,500 இலிருந்து ரூபா 12,937,216 வரையிலும் ரூபா 2,200,284 இனால் குறைவடைந்திருந்ததுடன், தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளருக்கு 2022 திசெம்பர் 19 ஆந் திகதி ரூபா 13,494,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் மே மாதத்தில் கிடைத்த மதிப்பீட்டின் அடிப்படையில் விற்பனை செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படாது, நவம்பர் மாதம் வரையிலும் இரு சந்தர்ப்பங்களில் இந்த மதிப்பீட்டினை மாற்றி விற்பனை செய்யும் நடவடிக்கைகள் தாமதமானமையால் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கூடுதலாக ரூபா 1,643,500 ஆன தொகையை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன், | இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த தங்கத்தை விற்பனை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொள்முதல் நடவடிக்கையின் போது, நாட்டில் நிலவும் அன்னியச் செலாவணி தொடர்பான சிக்கல் சூழ்நிலையால், தங்கத்தின் விலை அடிக்கடி ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டமையால் கணக்காய்வில சுட்டிக்காட்டப்பட்டபடி, தங்கத்தின் விலை குறைந்துள்ளது.<br><br>எவ்வாறான போதிலும், முறையான பெறுகை நடைமுறையை பின்பற்றி இந்த தங்கப் பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இது போன்ற நிலை ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மேலதிகமாக ரூபா 154,560 ஆன தொகை இரண்டாவது தடவை விலைக்கேள்வி கோரும் பத்திரிக்கை அறிவித்தலை பிரசுரிக்கும் போது செலவிட நேர்ந்தது.

(ஆ) சபையினால் 2022 செப்டம்பர் 05 ஆம் திகதிய 2022/09/2005 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் ஊடாக லக்ன வாசனாவ லொத்தர் சீட்டின் விற்பனைக்காக விற்பனை முகவருக்கு தற்போது வழங்கப்படும் ரூபா 3.25 ஆன தரகு பணத்திற்கு மேலதிகமாக ரூபா 0.50 ஆன மேலதிக தரகுப்பணம் 2022 செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் 03 மாத காலப்பகுதிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2022 டிசம்பர் 19 ஆம் திகதி முதல் அந்த ஊக்குவிப்புத் தொகையை வழங்குதல் 2023 ஜூன் 20 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையின் நிதியத்தில் லக்ன வாசனா லொத்தர் சீட்டுக்களுக்கு ரூபா 43,092,258 தொகையான மேலதிக தரகு பணம் விற்பனை முகவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய லக்ன வாசனாவ லொத்தர் சீட்டுக்காக மாத்திரம் மேலதிகமாக ரூபா 0.50 செலுத்தப்பட்டிருந்த போதிலும் செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் லக்ன வாசனாவ லொத்தர் சீட்டுக்களின் விற்பனையின் அதிகரிப்பானது 18 சதவீதமான போதிலும் அக்கால பகுதியினுள் மேலதிக தரக் பணம்

அந்த லொத்தர் சீட்டின் போட்டி சுற்றில் நேரடியாக போட்டியிடுவதற்கு ஹந்தஹன எனும் பெயருடைய லொத்தர் சீட்டிற்கு அதிக விற்பனை முகவர் நலன்கள் மற்றும் பரிசில் சதவீதத்தினை அதிகரித்து போட்டித் தன்மை வாய்ந்த நிறுவனங்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தியமை ஆகியவற்றால் லக்ன வாாசனா லொத்தர் சீட்டின் விற்பனைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியது. லக்ன வாசனா லொத்தர் சீட்டின் சுமார் 10 இலட்சமாக காணப்பட்ட நாளாந்த விற்பனை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு இந்த 50 சதம் வழங்கப்பட்டது.

அனைத்து லொத்தர் சீட்டுக்களினதும் விற்பனையில் அதிகரிப்பொன்று ஏற்படுமா என்பதை பரீட்சித்து மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை.

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்படாத ஏனைய லொத்தர் சீட்டுக்கள் 04 இன் விற்பனை அதிகரிப்பானது 16 சதவீதம் முதல் 30 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டமையால் லக்ன வாசனா லொத்தர் சீட்டுக்கு மாத்திரம் மேல-திகமாக 50 சதம் செலுத்தியமையால் சபை எதிர்பார்த்த லொத்தர் சீட்டு விற்பனையிலான அதிகரிப்பு இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | சபையின் 39 ஆவது ஆண்டு நிறைவுக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,575,000 தொகையான பதவியணி படிகளை செலுத்துவதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பில் விசேட அனுமதியை பெற்றுக்கொள்ள பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்கான அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 997,500 ஆன தொகை 2022 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகதியில் ஆக்கபூர்வ முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த கணக்கின் தேவைப்பாடு தொடர்பில் எதிர்காலத்தில் மீளாய்வு செய்து இந்த கணக்கை முடிவுறுத்தல் தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கின் தேவைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 04 லொத்தர் சீட்டு வகைகளில் 9,497,400 எண்ணிக்கையான E லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்ய எதிர்வுகூறப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக 885,675 லொத்தர் | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், நாட்டில் அவ்வப்போது ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் மற்றும் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொந்தளிப்பின் காரணமாக மின்-லாட்டரி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தடைபட்டன. மேலும், இந்த லொத்தர் App | இந்த முறையில் லொத்தர் சீட்டுக்களின் விற்பனையை மேற்கொள்ள உரிய வேலைத்திட்டத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | சீட்டுக்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அது இலக்கிடப்பட்ட அளவில் 9 சதவீதமாக காணப்பட்டதுடன், சபையின் ஒட்டுமொத்த லொத்தர் சீட்டு விற்பனையான 606,602,153 இன் 0.15 சதவீதம் மாத்திரம் ஆகும். | இற்கு நுழைவதை எளிதாக்கும் வகையில், சீரமைக்க இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புடைய தரப்பினருடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. நிறுவனத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதன்காரணமாக இவ்வருடம் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. | |
| (ஆ) | லொத்தர் பரிசில்களுக்காக வழங்குவதற்காக லங்கா சதொச கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 592,500 பெறுமதியான 123 பரிசில் வவுச்சர்கள் 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எதுவித பணிக்காகவும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடலைத் தலையிட்டு ஏற்பாடு செய்யுமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2023 மார்ச் 28 தேதியிட்ட கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | லங்கா சதொச நிறுவனம் மற்றும் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடி புதிய வவுச்சர்களை அல்லது பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2020 மே மாதத்தில் 07 லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு விநியோகிப்பதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் விலை கேள்வி ஆவணங்களுக்கு சரியான பெறுகைகள் வழிகாட்டல்களை பின்பற்றாத காரணத்தால் அதற்கும் 06 மாதங்களுக்கு பின்னர் | 2022 செப்தம்பர் 15 ஆந் திகதி திறக்கப்பட்ட அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழுவின் (SCAPC) கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சீட்டிழுக்கும் 08 லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு உரிய விலைக்கேள்வி கையளிப்பு 2023 ஏப்ரல் 17 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் 2023 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

அதாவது 2020 டிசம்பர் மாதத்தில் அப்பெறுகை நடவடிக்கைகளை இரத்து செய்ய நேர்ந்திருந்தது. மீண்டும் 2021 பிப்ரவரி மாதத்தில் 08 வகையான லொத்தர் சீட்டுகளை அச்சிட்டு விநியோகித்தல் தொடர்பில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் சபையின் தேவைப்பாட்டிற்கமைய விலை கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்படாத காரணத்தால் அதன் பின்னர் 11 மாதங்களுக்கு பிறகு 2022 ஜனவரி 20 ஆம் திகதி அந்த பெறுகையும் இரத்து செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மீண்டும் 2022 பெப்ரவரி மாதத்தில் அந்த 08 லொத்தர் சீட்டுகளுக்கு மீண்டும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் இறுதி வரையிலும் 01 வருடம் 01 மாதம் கடந்திருந்த போதிலும் வழங்குநர்களை தெரிவு செய்து விலை கேள்வியை கையளிப்பதற்கு சபை தவறியிருந்தது. அதற்கமைய அபிவிருத்தி லொத்தர் சபைக்கு 2020 ஜூலை 31 ஆம் திகதி முதல் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் சரியான பெறுகையொன்றின் மூலம் லொத்தர் சீட்டுகளை அச்சிட்டு விநியோகித்தல் மற்றும் மீள கையளிப்பதற்கு வழங்குநர்களை தெரிவு செய்ய முடியாதிருந்தது. ஏப்ரல் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, 2023 மே 16 முதல் 2024 மே 15 ஆந் திகதி வரையான ஆண்டுக்குரிய லொத்தர் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு இந்த பெறுகைக்குரிய விலைக்கேள்வி கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அந்த பெறுகை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் 2020 ஜூலை 31 ஆம் திகதி முதல் 2022 ஆம் ஆண்டின் இறுதி அளவில் 03 சந்தர்ப்பங்களில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த வருடத்திற்காக லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு அச்சீட்டாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு விலை கேள்வியை கையளிப்பதற்கு தவறியமை காரணமாக 2020 ஜூலை முதல் 2022 ஜூலை 31 வரையான காலப்பகுதியில் 01 மாதம், 02 மாதங்கள், 03 மாதங்கள், 04 மாதங்கள் மற்றும் 06 மாதங்கள் எனும் குறுங்காலப் பகுதிகளுக்கு லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு 09 சந்தர்ப்பங்களில் முனைய வழங்குநர்கள் இருவருக்கு அரசு பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.14 பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | நாடு மூடப்பட்டிருந்த காலத்தினை போன்றே, ஆரம்பத்தில் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விலைக்கேள்வி கோரல் இரத்துச் செய்யப்பட்டமை ஆகிய விடயங்கள் பெறுகைகள் நிறுவனத்திற்கு கட்டுப்படுத்த முடியாத தன்னிச்சையான நிகழ்வுகள் ஆகும். எனினும், சபையின் நாளாந்த லொத்தர் செயற்பாட்டு பணிகளுக்காக லொத்தர் சீட்டுகளை விநியோகித்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு அல்லாத போது விற்பனை வலையமைப்பின் வருமானம் இழக்கப்படுகின்றமையின் ஊடாக பாரிய சமூக சிக்கல்கள் உருவாவதற்கு, சபைக்கு பாரிய விற்பனை வருமானம் இழக்கப்படுகின்றமை ஆகியன முக்கியமான விடயங்கள் ஆகும். இந்த நிலைமையினுள் தற்போது காணப்படும் அச்சீட்டு உடன்டிக்கையை நீடித்தல் இதற்கான மாற்றுவழி என்பதால், உடன்படிக்கையின் இரு தரப்பினரதுட் இணக்கப்பாட்டுடன் அந்ததந்த சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த உடன்படிக்கை காலம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | 2022 பெப்ரவரி மாதத்தில் அமைச்சரவையின் நிலையான பெறுகைகள் குழுவின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த லொத்தர் சீட்டுகளை அச்சிடும் பிரதான பெறுகை நடைமுறை நிறைவடைந்திராத காரணத்தால் 2022 ஜூலை | அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழு (SCAPC) மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பெறுகைக்குரியதாக வழங்குநர் ஒருவரை தெரிவு செய்யும் வரையிலும், சபையின் நாளாந்த லொத்தர் செயற்பாடுகளுக்காக லொத்தர் சீட்டுகளை விநியோகித்தல் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| 01 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான 03 மாத காலப்பகுதிக்கு மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 190 மில்லியன் ஆன 08 வகையான லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் ஊடாக தேசிய போட்டி அடிப்படையிலான முறைமையின் கீழ் விலைக்கேள்வி கோரல் மூலம் இரு நிறுவனங்களுக்கு 03 மாத காலப்பகுதிக்கு மாத்திரம் விலைக்கேள்வி கையளித்தல் இடம்பெற்றிருந்ததுடன் 1½ மாதங்கள், 02 மற்றும் 03 மாதங்கள் ஆகிய குறுகிய காலப்பகுதிகளின் ஊடாக 2023 ஏப்ரல் 15 ஆம் திகதி வரையிலும் 09½ மாத காலப்பகுதிக்கு லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு இந்த இரு நிறுவனங்களுக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு அல்லாத போது விற்பனை வலையமைப்பின் வருமானம் இழக்கப்படுகின்றமையின் ஊடாக பாரிய சமூக சிக்கல்கள் உருவாவதற்கு, சபைக்கு பாரிய விற்பனை வருமானம் இழக்கப்படுகின்றமை ஆகியன முக்கியமான விடயங்கள் ஆகும். இந்த நிலைமையினுள் தற்போது காணப்படும் அச்சீட்டு உடன்டிக்கையை நீடித்தல் இதற்கான மாற்றுவழி என்பதால், உடன்படிக்கையின் இரு தரப்பினரதுட் இணக்கப்பாட்டுடன் அந்ததந்த சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த உடன்படிக்கை காலம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. | |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டு கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்த வாலம்புரி 01 சுற்றுடன் லொத்தர் சீட்டின் விற்பனை வருமானம் ரூபா 58,799,000 ஆக காணப்பட்ட போதிலும், அந்த லொத்தர் சீட்டின் வருமான மதிப்பீடு 2021 நவம்பர் 29 ஆந் திகதி மற்றும் 2022 செப்தம்பர் 28 ஆந் திகதிகளில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆரம்ப பாதீடு மற்றும் திருத்தப்பட்ட | வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் நுகர்வோர் மத்தியில் லொத்தர்களின் நம்பகத்தன்மை குறைந்து வருவதை அவதானிக்க முடிந்தது. அவர்களுக்கு லொத்தர் சீட்டுக்கள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் புதிய லொத்தர் சீட்டுகளை வழங்க சபை முடிவு செய்தது. அதன்படி வலம்புரி என்ற தமிழ் லொத்தர் சீட்டு | சரியான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

பாதீடு ஆகிய இரண்டிலும் உள்ளடக்கப்பட்டிராமையால், அந்த லொத்தர் சீட்டுக்களின் வருமான இலக்கினை சபை அடைந்திருந்ததா என்பது தொடர்பில் கணக்காய்வில் பரிசோதிக்க முடியாதிருந்தது.

வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், தமிழில் மட்டும் வெளியிடுதல் விவகாரம் இனவாதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதால், லொத்தர் சீட்டு சிங்களத்திலும் அச்சிடப்பட்டது. இந்த அறிமுகம் ஆண்டின் கடைசி காலாண்டில் நடந்ததால், இது 2022 பாதீட்டில் சேர்க்கப்படவில்லை மற்றும் 2023 பாதீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.